செய்தி வெளியீடு எண்: 12 நாள்: 08.01.2013

**மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் தலைமையில் அறநிலையத்துறையின் செயல்பாடுகள் மற்றும் நலத்திட்டங்கள் குறித்து மாநில அளவிலான மண்டல இணை ஆணையர்கள்அடங்கிய ஆய்வு கூட்டம் நடைபெற்றது**

மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் தலைமையில் இந்துசமய அறநிலையத்துறை ஆணையர் முன்னிலையில் இன்று 8.1.2013 அறநிலையத்துறையின் செயல்பாடுகள் மற்றும் நலத்திட்டங்கள் குறித்து தலைமை செயலகத்தில் மாநில அளவிலான மண்டல இணை ஆணையர்கள்அடங்கிய ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இந்த ஆய்வு கூட்டத்தில் மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள், திருக்கோயில்களில் நடைபெறும் திருப்பணிகளை விரைவுபடுத்த வேண்டும் எனவும், நன்கொடையாளர்கள் மற்றும் உபயதாரர்கள் திருப்பணி செய்ய முன்வரும்போது அவர்களுக்கு வேண்டிய ஆணைகளை உடன் வழங்க வேண்டும் என்றும், அன்னதான திட்டத்திற்கு முக்கியத்துவம் அளித்து மிகவும் கவனமுடன் பக்தர்களுக்கு தரமான உணவு வகைகளை அளிக்கவும், அன்னதான கூடங்களை நவீனமயமாக்கவும், அன்னதான கூடங்கள் இல்லாத இடங்களில் புதிய அன்னதான கூடங்கள் கட்டுவதற்கு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளவும் உத்தரவிட்டார்கள்.

மேலும் திருக்கோயில்களுக்கு சொந்தமான நிலங்கள் பாதுகாப்பினை உறுதி செய்ய வேண்டும் எனவும், அனைத்து காலிநிலங்கள், கட்டிடங்களை திருக்கோயில் பெயர், சர்வே எண், பரப்பளவு போன்ற விபரங்களை பொதுமக்கள் அறியும் வண்ணம் எழுதி வைக்க வேண்டும் எனவும், ஆக்கிரமிப்புகளை அகற்றுவதில் தயக்கம் கொள்ள கூடாது எனவும், அதுபோல் வாடகைதாரர்கள், குத்தகைதாரர்களிடம் இருந்து கோயில்களுக்கு வரவேண்டிய நிலுவைகளை விரைந்து வசூலிக்கவும், குத்தகை வாடகையினை செலுத்த மறுப்போர் மீது சட்டப்பிரிவு நடவடிக்கை எடுத்து வெளியேற்ற வேண்டும் எனவும், அறிவுரை வழங்கினார்கள்.

மேலும் திருக்கோயில்கள் பாதுகாப்பினை வலுபடுத்த வேண்டும் எனவும், தேவையான இடங்களில் கண்காணிப்பு கேமரா, களவு எச்சரிக்கைமணி போன்ற உபகரணங்கள் பொருத்தப்பட வேண்டும். திருக்கோயில்களில் களவே இல்லை என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும், பூஜைகள் இல்லாத பாதுகாப்பு அற்ற உற்சவ விக்கிரகங்களை அருகில் உள்ள பாதுகாப்பு மையங்களில் வைக்க உடன் ஏற்பாடு செய்ய வேண்டும் எனவும் அதிகாரிகள் அக்கறையுடனும், விழிப்புடனும் செயல்பட வேண்டும் எனவும், காவல் துறையுடன் தொடர்பு கொண்டு இரவு ரோந்து பணிகளை முடுக்கி விடவேண்டும் எனவும், அறிவுறுத்தியதோடு பொதுமக்களையும் திருக்கோயில் பாதுகாப்பில் ஈடுபட செய்ய வேண்டும் என கேட்டுக் கொண்டார்கள்.

அரசின் நலதிட்டங்களை செயல்படுத்துவதில் தனி அக்கறை கொள்ளவும், திருக்கோயிலுக்கு வரக்கூடிய பக்தர்களுக்கு அடிப்படை வசதிகளை செய்தளிப்பதோடு திருக்கோயில்களை தூய்மையாகவும், சுகாதரமாகவும் பேணுவதில் கவனம் செலுத்தி பக்தர்களின் அவாவினை நிறைவு செய்ய வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள்.

கூட்ட இறுதியில் அனைத்து அலுவலர்களும் தொண்டு உள்ளத்தோடு பணியாற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திட்டங்கள் பக்தர்களுக்கு விரைவில் சென்றடையும் வண்ணம் செயல்படவேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள்.

வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.